## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.97/2014

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பொன்னுசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : அண்ணாமலை | ஜாதி | : -- |
| வயது | : 74 | கிராமம் | : அம்மையார்குப்பம் |
| தொழில் | : ஆசிரியர் (ஓய்வு) | வட்டம் | : திருத்தணி |

**19.09.2025**
**வா.சா. 2 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் 19.08.1991ம் தேதியிட்ட வா.சா.ஆ 3 ஆவணத்தில் உள்ள 2ம் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **(சாட்சி கையெழுத்து வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என்று உள்ள 2ம் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **(சாட்சி கையெழுத்து வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)